கருத்திட்டத்தின் பெயர் : தியகல சிறுவர் நகரத்தில் (Boys' Town) உயிர் வாயு அலகை நிர்மாணித்தல்

விதாதா வள நிலையம் : ஜா எல

மாவட்டம் : கம்பஹா

கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி : 2018.01.29

கருத்திட்டத்தின் மொத்த செலவு : **ரூ. 1,290,240.50**

அமைச்சின் பங்களிப்பு : **ரூ. 903,169.75**

கருத்திட்டத்தின் தற்போதைய செயற்பாட்டு நிலை :

அமைச்சுக்கு அனுப்பப்பட்ட கருத்திட்ட முன்மொழிவில் குறிப்பிட்டவாறு உயிர் வாயு ஜீரன அலகின் நிர்மாண பணிகள் முழுமையாக முடிவடைந்துள்ள. உயிர் வாயு ஜீரன அலகிற்குள் மூலப்பொருட்களை உட்புகுத்தும் பணிகள் தினசரி இடம்பெறுவதோடு உயிர் வாயு உற்பத்தி ஒழுங்குமுறையாக நடைபெறுகிறது.

கருத்திட்டத்தின் நோக்கத்தை அடைவதில் முன்னேற்றம் :

1. <u>விலங்கு வளர்ப்பின் மூலம் ஏற்படக்கூடிய சூழலியல் சிக்கல்களைக் குறைத்தல்</u>
   தியகல சிறுவர் நகரத்தின் சிறுவர்களின் அறிவை வளர்ப்பதற்கும் நிதி தேவைகளை நிறைவுசெய்துகொள்ளுவதற்கும் விலங்கு வளர்ப்பு (மாடு/பன்றி) மேற்கொள்ளப்படுகிறது. தற்பொழுது சுமார் 63 பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. மற்றும் பன்றி பட்டிகளில் சேர்கின்ற கழிவுப் பொருட்கள் அனைத்தையும் உயிர் வாயு அலகில் சேர்ப்பதால் அதுவரை இருந்த சூழலியல் பிரச்சினைகள் பலவற்றிக்கு (துர்நாற்றம்/சுற்றுச் சூழலில் உள்ள மக்களிடமிருந்து முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள்/கழிவுப் பொருட்களை அகற்றும்போது தோன்றிய சிகல்கள்) தீர்வு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.
   அதன் பிரகாரம் இந்த கருத்திட்டத்தின் பிரதான நோக்கமான குப்பைகூள முகாமைத்துவம் மற்றும் கழிவுப் பொருட்களை பயனுறுதிமிக்க வகையில் அகற்றுதல் என்பவை வெற்றிகரமாக நடைபெறுகிறது.

2. <u>சேதன திரவ பசளை பயன்பாட்டின்மூலம் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கையை மேற்கொள்ளுதல்</u>
   தியகல சிறுவர் நகரத்தின் பிள்ளைகளின் நுகர்வையும் மிகையாக இருப்பதை சலுகை விலையில் விற்று வருமானம் ஈட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. உயிர் வாயு அலகை செயற்படுத்துகின்றபோது அதிலிருந்து வெளிவருகின்ற சேதன திரவ பசளை இந்த பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே நச்சுப் பொருட்களற்ற சேதன காய்கறிகள் மற்றும் பழங்கள் என்பவற்றை உற்பத்தி செய்வதற்காக இக் கருத்திட்டத்தின் பங்களிப்பு கிடைத்துள்ளது.

3. <u>உயிர் வாயுவை பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளுதல்</u>
   தினசரி உற்பத்தியாகின்ற உயிர் வாயு தியகல சிறுவர் நகர ஊழியர் தங்கும் விடுதிகளில் சமையல் வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

கே.வை.பி. தர்ஷிகா
விஞ்ஞான, தொழில்நுட்ப உத்தியோகத்தர்
ஜா எல